MELUR MUNICIPALITY
Minutes of the Council Meeting held on 30.07.2021 (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 124 | **மன்றப்பொருள் எண்.1**<br><br>இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பொதுப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள தம்மை ஒப்பந்ததாராக பதிவு செய்ய வேண்டி திரு.எஸ்.ரவி என்பவர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தொழில்நுட்ப ரீதியாக ஆவணங்கள் சரியாக உள்ளதால் தனியரது விண்ணப்பத்தினை ஏற்று மேலூர் நகராட்சியில் நடைபெறும் பொதுப்பணிகளுக்கு ஐந்தாம்நிலை ஒப்பந்ததாராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 125 | **மன்றப்பொருள் எண்.2**<br><br>மேலூர் நகராட்சிக்கு உட்பட்ட மலம்பட்டி குப்பை கிடங்கில் IUDM 2018–2019 திட்டத்தின் கீழ் கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. மேற்கண்ட சுத்திகரிப்பு நிலையம் பயன்பாட்டிற்கு வரும் போது அலுவலகம் சம்பந்தமான கோப்புகள் வைப்பதற்கும் மற்றும் அலுவலர்கள் பணி செய்வதற்கும் , பராமரிப்பை கண்காணிப்பதற்கும் அலுவலகக்கட்டிடம் தேவைப்படுவதால் நகராட்சி பொதுநிதியின் கீழ் கட்டிடப்பணிகள் செய்ய ரூ.10.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட பணி மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கும், ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 126 | **மன்றப்பொருள் எண்.3**<br>இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பொதுப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள தம்மை ஒப்பந்ததாராக பதிவு செய்ய வேண்டி திரு.ஏ.முத்துப்பாண்டி என்பவர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தொழில்நுட்ப ரீதியாக ஆவணங்கள் சரியாக உள்ளதால் தனியரது விண்ணப்பத்தினை ஏற்று மேலூர் நகராட்சியில் நடைபெறும் பொதுப்பணிகளுக்கு ஐந்தாம்நிலை ஒப்பந்ததாராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| 127 | **மன்றப்பொருள் எண்.4**<br>மேலூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு நடப்பாண்டிற்கு (2021–2022) வாகன காப்பீட்டுத்தொகை ரூ.79999/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.<br>**வ.எண்.** **வாகன எண்.** **தொகை**<br>1. TN59 BX 1344 ரூ.38195<br>2. TN59 BZ 9453 ரூ.20902<br>3. TN59 BZ 9457 ரூ.20902<br>**மொத்தம்** **ரூ.79999**<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.657/2021/எச்1 | அனுமதிக்கப்பட்டது. |
| 128 | **மன்றப்பொருள் எண்.5**<br>மேலூர் நகராட்சி சிவகங்கை சாலையிலுள்ள ஆர்.சி.பள்ளிக்கு அருகில் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத கழிப்பறையை சொந்தசெலவில் இடித்து அப்புறப்படுத்திக் கொள்வது என்ற நிபந்தனைகளின்படி தரைவாடகைக்கு குத்தகைக்கு விடப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி காலியிடத்தில் மீண்டும் பொதுக்கழிப்பறை கட்டித்தரக்கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் திரு.எஸ்.செந்தில் என்பவரால் வழக்கு W.P.(MD) எண்.6623/2021 ல் தொடரப்பட்ட வழக்கு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டு 30.06.2021 ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மேற்படி வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.9500/– திரு.குணசீலன்முத்தையா நகராட்சி வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.200/2020/அ2) | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>129</td>
<td>

**மன்றப்பொருள் எண்.6**

மேலூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கும் டிப்பர் லாரி TN59 BX 1344 வண்டியில் பழுது ஏற்பட்டுள்ளதை சரிசெய்யவும், கீழ்க்கண்ட பழுதுகளை நீக்கம் செய்ய உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களல் விலைப்புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.75000/– மன்றத்தின் அனுமதிக்கு.

**TN59 BX 1344வண்டியின் பழுதுப்பணிகள்**

1. ஆயில் சர்வீஸ்
2. ஸ்டேரிங் பாக்ஸ்
3. பிளாட்பாரம்(தொட்டி)
4. செல்ப்மோட்டார் டயனமோ
5. கியர் ஆயில் கிரோன் ஆயில்செக்கப்
6. டோர் லாக்
7. டீசல் டேவ்லீக் சரிபார்த்தல்
8. கிளாச்சி பிளேட்
9. எலக்ட்டிரிக் செக்கப்

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>130</td>
<td>

**மன்றப்பொருள் எண்.7**

மேலூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1921 பிரிவு 15ன் கீழ் விலைப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><td>வ. எண்.</td><td>வேலையின் விபரம்</td><td>மதிப்பீடு தொகை ரூ.</td></tr>
<tr><td>1.</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொற்றாளர்கள் உள்ள பகுதிகளில் /தெருக்களில் தடுப்புகள்(Barricades) அமைக்க விலைப்புள்ளி கோரி தடுப்பு</td><td>ரூ.60000/–</td></tr>
</table>

</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | வேலி அமைக்கப்பட்டது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.391/2021/எச்1) | |
| 131 | **மன்றப்பொருள் எண்.8**<br><br>மேலூர் நகராட்சி பேருந்துநிலையம் அருகே சாலையோரத்தில் வியாபாரம் செய்யும் திரு.எஸ்.தமிழ்செல்வம் என்பவர் தான் செய்து வரும் வியாபாரத்திற்கு நகராட்சி அதிகாரிகள் இடஞ்சல் செய்வதாக தெரிவித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) எண்.555/20191 ன்படி வழக்கு தொடரப்பட்டு தொடர்ந்து வழக்கு நடைபெற்று வந்தது. தற்சமயம் மேற்படி வழக்கில் 29.06.2021 ம் தேதியில் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மேற்படி வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.9500/— திரு.குணசீலன்முத்தையா நகராட்சி வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 132 | **மன்றப்பொருள் எண்.9**<br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட சந்தைப்பேட்டையில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் கட்டப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது. உரக்கிடங்கு இருக்கும் இடத்தின் அருகாமையில் மாட்டுசந்தை, உழவர் சந்தை நடைபெறுவதால் சந்தை வருபவர்கள் ஆங்காங்கே வாகனங்களை நிறுத்தி சென்று விடுவதால் நுண்ணுயிர் உரக்கிடங்கிற்கு இடையூறாக உள்ளதால் மேற்படி உரக்கிடங்கினை சுற்றி தடுப்பு வேலி அமைக்க தயார்செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.75000/— ற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1) மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2) மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 133 | **மன்றப்பொருள் எண்.10**<br>மேலூர் நகராட்சி அலுவலகம் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி–2014–15 திட்டத்தின் கீழ் திருவாதவூர் சாலையில் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. இந்நகராட்சி அலுவலகத்தில் வடக்குப்பகுதியில் உள்ள பழைய சுற்றுச்சுவர் இடிந்து மோசமான நிலையில் உள்ளது. நகராட்சி வளாக கிழக்கு பகுதியில் 3.00இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயங்கி வருகிறது. சுற்றுச்சுவர் இடிந்துள்ளதை பயன்படுத்தி அருகில் உள்ள வீடுகளில் வசிக்கும் சிறியவர்கள் ,பெரியவர்கள் அவ்வப்போது வந்துதேவையின்றி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் மேல் ஏறி வருகின்றனர். மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் பாதுகாப்பை கருத்தில்கொண்டும், நகராட்சி அலுவலக பாதுகாப்பை கருத்தில் கொண்டும் இடிந்த சுற்று சுவரை கட்டமைக்கும் பணிக்கு தயார்செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 134 | **மன்றப்பொருள் எண்.11**<br>15வது மத்திய நிதிக்குழு 2020–2021 பரிந்துரையின்கீழ் மேற்கொள்ளப்படும் கீழ்க்கண்ட பணிகளுக்கு 11.08.2021 அன்று மின்ஒப்பந்தப்புள்ளி நடைபெற இருந்ததை 23.07.2021 அன்று தினமணி நாளிதழில் பக்க எண்.8ல் விளம்பரம் செய்யப்பட்டது.<br><table><tr><td>வ. எண்.</td><td>வேலை விபரம்</td><td>மதிப்பீடு ரூ.இலட்சத்தில்</td></tr><tr><td>1.</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட புல்பண்ணை பகுதியில் நுண்ணுயிர் உரக்கிடங்கு அமைக்கும் பணி</td><td>50.00</td></tr><tr><td>2.</td><td>இந்நகராட்சிக்கு புதிதாகShereding Machine, Bailing Machine, Dry Waste Machine வாங்கும் பணி</td><td>17.02</td></tr></table>மேற்கண்டவாறு விளம்பரம் செய்தமைக்கான தொகை ரூ.20362/–ஐ Express Publications க்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 135 | **மன்றப்பொருள் எண்.12**<br>இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பொதுப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள தம்மை ஒப்பந்ததாராக பதிவு செய்ய வேண்டி திரு. எம்.ஆயுப்கான் என்பவர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தொழில்நுட்ப ரீதியாக ஆவணங்கள் சரியாக உள்ளதால் தனியரது விண்ணப்பத்தினை ஏற்று மேலூர் நகராட்சியில் நடைபெறும் பொதுப்பணிகளுக்கு ஐந்தாம்நிலை ஒப்பந்ததாராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 136 | **மன்றப்பொருள் எண்.13**<br>26.05.2021 அன்று மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தற்போது கொரோனா தொற்று பரவும் விகிதம் கிராமங்கள் மற்றும் நகர்பகுதிகளில் அதிகரித்துவருவதால் தொற்றினை கட்டுப்படுத்தும் விதமாக மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் கூடுதல் பணியாளர்களை நியமித்து நகரில் உள்ள அனைத்து வீடுகளிலும் , காய்ச்சல், சளி , இருமல், தொண்டை கரகரப்பு உள்ளதா என கணக்கெடுப்பு நடத்த உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து மேலூர் நேயம் பெண்கள் பெடரேஷன் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி அடிப்படையில் 40 பணியாளர்களை நியமித்து இந்நகராட்சியின் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொண்டதையும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.110000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |